# A STUDY ON THE APPROACH TO INCREASE THE LEVEL OF INCOME OF PEOPLE IN THE KITHUL GRAMA NILADARI DIVISION, ERAVUR PATTU

LIBRARY
17 NOV 2006
Eastern University, Sri Lanka.

Eastern University, Sri Lanka
Faculty of Com. & Mgt.
22 SEP 2006
Department of Commerce

KONESALINGAM THIVIYAN

FCM801
Project Report
Library - EUSL

DEPARTMENT OF COMMERCE
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY, SRILANKA.

2006

## ஆய்வுச் சுருக்கம்


மக்களின் வாழ்க்கைத்தரம் என்பது பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. அவையாவன வருமானம், கல்வி, தொழில்வாய்ப்பு, சுகாதாரம், உணவு, வீட்டுவசதி, உட்கட்டுமான வசதிகள் என்பனவாகும். கித்துள் கிராமத்தினை பொறுத்தவரையில் பிரதானமாக அனைத்து வாழ்க்கைத்தர காரணிகளும் வருமானத்திலே தங்கியுள்ளதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. அதாவது அவர்களது வருமானம் அதிகரிக்கும் போதே அவர்களது சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி, உணவு, உட்கட்டுமான வசதிகள் என்பன அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இக் கிராமத்தில் வாழும் மக்களின் வருமானம் அவர்களது அடிப்படை வசதிகளையே பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு பின்தங்கியதாக கடந்த பல வருடங்களாக காணப்படுகின்றது. இதனால் இக்கிராமத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரமானது ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது மிகவும் பினதங்கிய நிலையில் காணப்படுகின்றது. எனவே இக்கிராமத்தில் வாழும் மக்களின் வருமான மட்டத்தினை அதிகரிப்பதற்கு ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள உழைக்கும் வர்க்கத்தினர் தற்போது ஈடுபடும் தொழில் முயற்சியானது அவர்களுக்கு சாதகமாக இருப்பின் அதனை விஸ்தரித்தல் அல்லது புதிய தொழில்முயற்சிகளை ஆரம்பித்தல் ஆகிய இரு செயற்பாடுகளுக்கூடாகவும் மக்களின் வருமான மட்டத்தில் ஓர் சாதகமான மாற்றத்தினை ஏற்படுத்தி அதற்கூடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை அதிகரிக்க உதவுதல் இவ் ஆய்வின் குறிக்கோளாகும். இதனடிப்படையில் எண்ணக்கருவாக்கமானது இவ்வாய்வின் குறிக்கோளினை நிறைவு செய்யும்விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது இக்கிராம மக்களின் பிரதான பிரச்சனையாக அடையாளம் காணப்பட்ட குறைந்தளவிலான வருமான மட்டத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் நிமித்தம் இரு சாரா மாறிகளான தற்போதைய தொழில் முயற்சியினை விஸ்தரித்தல், புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதல் என்பனவற்றிற்கு உப காரணிகளான நிதிவசதி, சந்தைப்படுத்தல், தொழிற்பயிற்சி, சேமிப்பும் முதலீடும் போன்றவற்றினை ஏற்படுத்தி கொடுப்பதன் மூலம் அல்லது அதற்கான வழிமுறைகளை இனம் காட்டி அதனை செயற்படுத்துவதன் மூலம் சார்ந்த மாறியான வருமான அதிகரிப்பில் ஓர் சாதகமான மாற்றத்தினை ஏற்படுத்த முடியும்.

இக்கிராமத்தில் வசிக்கும் 422 குடும்பங்களில் ஆய்விற்காக எழுமாற்று ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 100 மாதிரி குடும்பங்களிடம் மேற்கொண்ட பேட்டிகள், கலந்துரையாடல், வினாக்கொத்து மூலம் முதல்தர தரவுகளும், இக்கிராமத்தை பற்றிய செங்கலடி பிரதேச செயலகத்தின் தரவுகள், இக்கிராமத்தில் காணப்படும் மீனவர் சங்கம், கிராம அபிவிருத்தி சங்கம் போன்றவற்றின் மூலம் இரண்டாம் தர தரவுகளும் பெறப்பட்டன. இவ் ஆய்விற்காக கித்துள் கிராம மக்களிடம் இருந்து வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் SPSS இல் தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவு முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட, பிரதானமாக இம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக ஆரம்ப மூலதனமின்மை, கடன்பெற்று தொழிலில் ஈடுபடுவதனால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான விலை நிர்ணயம் கடன் கொடுத்தோரினால் நிர்ணயிக்கப்படுகின்றது. இதனால் தொடர்ந்தும் இம்மக்கள் கடனாளிகளாக இருக்க வேண்டிய நிலை, இக்கிராமத்தில் உள்ள தொழில்கள் முயற்சிகள் பெரும்பாலும் பருவகால தொழில்களாக காணப்படுவதால் ஏனைய காலங்களில் வருமானமின்மை இதனால் மீண்டும் மீண்டும் கடன் பெற வேண்டிய துர்பாக்கியநிலை என்பன காணப்படுகின்றது. இதற்கு பின்வரும் ஆலோசனைகள் மூலம் தீர்வு காண முடியும் அவையாவன இக்கிராம மக்களின் தொழில்முயற்சிக்கான ஆரம்ப மூலதனத்தினை குறைந்த வட்டி அடிப்படையில் அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் என்பனவற்றில் இருந்து கடனாக பெற்றுக்கொடுத்தல், இப்பிரதேச வளங்களுக்கேற்ற தொடற்சியாக இக்கிராம மக்கள் வருமானம் பெறக்கூடிய தொழில் முயற்சிகளை இனம் காட்டல் என்பன மூலமாக இக்கிராம மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

# CONTENTS


| TITLE | PAGE NO |
|---|---|
| Acknowledgement | I |
| Abstract | II |
| Abstract (Tamil) | III |
| Contents | IV |
| List of tables | VI |
| List of figures | VII |
| **01. INTRODUCTION** | **1 - 9** |
| 1.1 Overview of the study | 1 |
| 1.2. Problem Statement | 7 |
| 1.3 Objective of Research | 8 |
| 1.4. Significance of Research | 8 |
| 1.5. Limitations | 8 |
| 1.6. Assumptions | 9 |
| **02. LITERATURE REVIEW** | **10 - 38** |
| 2.1 Introduction | 10 |
| 2.2 Income | 10 |
| 2.3 Job enlargement | 14 |
| 2.4 Finance | 15 |
| 2.5 Marketing | 20 |
| 2.6 Training | 27 |
| 2.7. Saving and investment | 33 |
| **03. CONCEPTUALIZATION AND OPERATIONALIZATION** | **39 - 47** |
| 3.1 Introduction | 39 |
| 3.2 Conceptualization | 39 |
| 3.3 Operationalization | 43 |
| 3.4 Summary | 47 |

| | |
|---|---|
| **04. METHODOLOGY** | **48 - 52** |
| 4.1 Introduction | 48 |
| 4.2 Method of Data Collection and Measures | 48 |
| 4.3 Method of Data presentation and analysis | 51 |
| 4.4 Methods of data evaluation | 52 |
| 4.5 Summary | 52 |
| **05. DATA PRESENTATION AND ANALYSIS** | **53 - 65** |
| 5.1 Introduction | 53 |
| 5.2 Personal Information | 53 |
| 5.3 Research Information | 57 |
| 5.4 Summary | 64 |
| **06. DISCUSSION, AND CONCLUSION AND RECOMMENDATION** | **65 -78** |
| 6.1 Introduction | 65 |
| 6.2 Discussion on research variable | 65 |
| 6.3 Conclusion on research variable | 73 |
| 6.4 Recommendation on research variable | 74 |
| **REFERENCES** | **79** |
| **APPENDIX** | |